பழையன கழியாமலும் புதியன புகலாம்!

“பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே!”

என்று கூறும் நம் பழந்தமிழ் நூலான நன்னூல்!

இது தமிழ் மரபு மட்டுமில்லை, இதுவே உலகளாவிய இயற்கை நெறியும் கூட!

எனினும், பழையன எல்லாவற்றையும் கழித்து விட வேண்டும் என்பது இதன் பொருள் ஆகாது! அப்படி அனைத்தையும் நம்மால் கழித்து விட முடியாது, கழித்திட வேண்டிய தேவையும் இல்லை!

பழையனவற்றில் தேவையற்றவை களையும், பொருளற்றவைகளையும் கழித்து விடுக என்பதே இதன் உட்பொருள்!

இதுகுறித்த சிந்தனை இப்போது நம் அனைவருக்கும், குறிப்பாக இயக்க உணர்வாளர்கள் அனைவருக்கும் தேவைப்படுகின்றது!

அண்மையில் நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல், நமக்குச் சில படிப்பினைகளைத் தந்திருக்கிறது! அதே நேரம், சில தவறான முடிவுகளை நோக்கியும் சிலரைத் தள்ளி இருக்கிறது!

30 வயதுக்குட்பட்ட இன்றைய இளம் பிள்ளைகள் பலர், சமூக வலைதளங்களுக்குள் (குறிப்பாக insta, reels போன்றவற்றில்) சிறைப்பட்டிருப்பதைத் தேர்தல் முடிவுகள் உணர்த்துகின்றன! ஆகவே நாமும் இனிமேல் முழுமையாக அவை போன்ற சமூக வலைதளங்களில் கவனம் செலுத்த வேண்டும் என்று பலர் கருதுகின்றனர்!

சுப.வீரபாண்டியன்
திராவிட இயக்க தமிழர் பேரவைத் தலைவர்

இது சரியான பார்வைதான்! ஆனால், இவை மட்டுமே போதுமானவை, நீண்ட கட்டுரைகளோ, கருத்தரங்குகளோ இனிமேல் தேவையில்லை என்ற முடிவுக்கு நாம் வந்தால், அது ஆபத்தானது!

விஞ்ஞானத்தோடு சேர்ந்து ஓடாத எவரும் வீழ்ந்து போவார்கள் என்பது உண்மை! ஆதலால், புதிய தொழில்நுட்ப வளர்ச்சிகளை நாம் கைக்கொண்டே ஆக வேண்டும்!

அதே நேரம், ஆழ்ந்த, விரிவான கட்டுரைகளையும், ஆழமான செய்திகளைப் பகிர்ந்து கொள்ளக்கூடிய கருத்தரங்குகளையும் நாம் ஒரு நாளும் கைவிட்டு விடக்கூடாது!

எந்த ஒரு வரலாறும், கொள்கை கோட்பாடும் இல்லாதவர்கள், அரை நிமிடத்திலும் ஒரு நிமிடத்திலும் வேடிக்கை காட்டி விட்டுப் போய்விடலாம். ஆனால் நீண்ட, நெடிய சமூக வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட இயக்கத்தினர், அப்படிச் சில நிமிடங்களில் தங்கள் பணியை முடித்துக் கொண்டு விட முடியாது, கூடாது!

அப்படிச் செய்தால், பிற்காலத்தில் நமக்கு எந்த ஓர் ஆவணமும் இல்லாமல் போய்விடும்!

இந்தியாவில் செழித்து வளர்ந்திருந்த பௌத்த மதத்தை, இந்து மதம் எப்படி ஆட்கொண்டது என்பதையும் நாம் இங்கே நினைத்துப் பார்ப்பது நல்லது!

பௌத்தத்தின் எல்லாக் கூறுகளையும் இந்து மதம் கழித்து விடவில்லை; சிலவற்றை உள்வாங்கிச் செரித்துத் தன் வயமாக்கிய பிறகு, தன் சனாதனக் கொள்கையை அதன் மீது திணித்தது! எதிர் நிலையில் உள்ளவர்களிடமிருந்தும் நாம் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே, இந்த எடுத்துக்காட்டு!

இந்தியாவில் குப்தப் பேரரசு ஆட்சி நடந்த காலத்தில், அது வரையில் மக்களிடம் வெகுவாகப் பரவியிருந்த பௌத்த மதத்திற்குச் சில சிக்கல்கள் ஏற்பட்டன என்று கிபி 5 ஆம் ஆண்டு நூற்றாண்டில், இந்தியாவிற்கு வந்த ஃபாஹியான் (Fa Hien) என்னும் சீனப் பயணி, தன் பயணக் குறிப்பில் எழுதி இருக்கிறார். பிறகு ஏழாம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு, அதே சீனாவில் இருந்து வந்த யுவான் சுவாங் என்னும் பயணி, பௌத்தம் அழிந்து கொண்டிருப்பதாகக் குறிப்பிடுகிறார்!

அந்தக் காலகட்டத்தில் தோன்றிய சங்கராச்சாரியார், பௌத்த மதத்தின் அகிம்சை, புலால் மறுத்தல் போன்ற கோட்பாடுகளைத் தன்மயம் ஆக்கிக் கொண்டு, சங்கர மடத்தை நிறுவுகின்றார்! மடத்தின் வழியாக (விஹாரை), மக்களை அணுகுவது என்பதும் பௌத்தம் காட்டியவழிதான்! அதனால்தான் ஆதிசங்கரரைப் “பிரசன்ன பௌத்தர்” (மறைமுகமாகப் பௌத்தத்தை உள்வாங்கியவர்) என்றும் வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பர்!

இப்போது புதிதாக முளைத்திருக்கும் சில கட்சிகளும், பெரியார், அம்பேத்கர் போன்ற நம் தலைவர்களைத் தங்கள் கொள்கைத் தலைவர்கள் என்று முன்னிறுத்திக் கொண்டு, திராவிட மாடல் அரசின் திட்டங்களையே கொஞ்சம் மிகுதிப்படுத்திச் சொல்லி (top up), புதிய தொழில்நுட்ப வழிமுறைகளின் மூலம் இளைஞர்களை அணுகுகின்றனர்!

நாமும் இன்று மீண்டும் புதிதாய்ப் பிறக்க வேண்டி உள்ளது!

புதிய அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சிகளை சரியாகப் பற்றி நின்று, அந்த வடிவங்களையும், அந்த அணுகுமுறைகளையும் பயன்படுத்திக் கொள்வதோடு, கருத்தரங்குகள், செறிவான கட்டுரைகள், இயக்கக் கலந்துரையாடல்கள் போன்ற வடிவங்களையும் விடாமல் தொடர்ந்திட வேண்டும்!

பழையன கழியாமலும் புதியன புகுவோம்!

நவீன தமிழ்நாட்டின் சிற்பி – முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழாவை

தூத்துக்குடி வடக்கு மாவட்டம் முழுதும் நல உதவிகள் வழங்கி சிறப்பாகக் கொண்டாடுவோம்!

மாவட்டக் கழகச் செயலாளர் திருமதி. பி.கீதா ஜீவன் அறிக்கை!

தூத்துக்குடி, மே 31-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103-வது பிறந்தநாளை முன்னிட்டு தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.கழகத்தின் பல்வேறு அமைப்புகள் சார்பில் கொண்டாடுவது குறித்து மாவட்டக் கழக செயலாளர் திருமதி. பி. கீதாஜீவன் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவித்திருப்பதாவது:-

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 103-வது பிறந்தநாளை முன்னிட்டு தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு மற்றும் கிளைக்கழக அமைப்புகள் தோறும் ஜூன் - 3 ஆம் தேதி கலைஞர் அவர்கள் திருவுருவப்படத்திற்கு மாலையணிவித்து மரியாதை செலுத்தியும், கழக கொள்கை விளக்கப் பாடல்களை ஒலிபரப்பச் செய்தும், தி.மு.க. கொடியேற்றியும், பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும், ஆதரவற்றோர் இல்லங்களுக்கு உணவு வழங்கியும், கழக நிர்வாகிகள் கொண்டாடிட வேண்டும்.

நாட்டிலேயே கணினி கல்வியை தமிழ்நாட்டில் முதன்முதலில் அறிமுகப்படுத்தியது, தமிழ்நாட்டில் அனைத்து தரப்பினருக்குமான திட்டங்களை தந்து தமிழ்நாட்டை வளர்ச்சியடைய செய்தது, தமிழ் நாடு மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திட பல்வேறு திட்டங்களை தந்தது, தமிழ்மொழிக்கு செம்மொழி அந்தஸ்து வாங்கி தந்தது முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆவார்.

இந்தியாவிலேயே முதல் முறையாக ஆண்களுக்கு நிகராக பெண்களுக்கும் சொத்தில் சம உரிமைச் சட்டம், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், காவல்துறை ஆணையம் அமைத்து பெண்களை காவல்துறையில் பணியமர்த்தியது, அரசுப் பணிகளில் பெண்களுக்கு 30% இட ஒதுக்கீடு, பெண்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக மகளிர் சுய உதவிக் குழுக்கள், ஏழை எளிய மக்களின் கண்ணியமான வாழ்விடத்திற்காக குடிசை மாற்று வாரியம், சமத்துவபுரம், கலைஞர் வீடுகள் திட்டம் என எண்ணற்ற பல முன்னோடித் திட்டங்களை தமிழ்நாட்டிற்குத் தந்து சமூகநீதியையும், சமத்துவத்தையும் நிலை நாட்டிய “நவீன தமிழகத்தின் சிற்பி” என போற்றப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை மக்கள் பயனுற கொண்டாடும் வகையில், தூத்துக்குடி வடக்கு மாவட்டத்தில் மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, மற்றும் பேரூர் கழகங்கள் சார்பில் வெகு சிறப்பாக அனைவரும் கொண்டாட வேண்டும்.

இந்த நிகழ்ச்சிகளில் அந்தந்த பகுதிகளைச் சேர்ந்த மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள், கழக தொண்டர்கள், சார்பு அணி நிர்வாகிகள், செயல் வீரர்கள், இளைஞரணியினர் திரளாக கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் திருமதி. பி.கீதாஜீவன் தெரிவித்துள்ளார்.

பல்லாவரம் வடக்கு - தெற்கு பகுதி கழக கூட்டம்: இ. ஜோசப் அண்ணாதுரை - இ.எஸ்.பொன்னார்ட் வரவேற்புரை!

முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்த நாளை எழுச்சியுடன் கொண்டாடுங்கள்!

மாவட்டச் செயலாளர் தா.மோ. அன்பரசன் சிறப்புரை! இ.கருணாநிதி பங்கேற்பு!

பல்லாவரம், மே 31

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பல்லாவரம் வடக்கு மற்றும் பல்லாவரம் தெற்கு பகுதி கழக சார்பாக பொது உறுப்பினர்கள் கூட்டம் நேற்று 30-5-2026 சனிக்கிழமை காலை 9 மணி அளவில் பல்லாவரம் துரைப்பாக்கம் 200 அடி சாலையில் அமைந்துள்ள விதுர் மஹால் திருமண மண்டபத்தில் பகுதி கழக அவைத் தலைவர்கள். வை.த.ரா. மூர்த்தி இரா. சேகர் ஆகியோர் தலைமையில் பகுதி கழகச் செயலாளர் மண்டலத் தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை வரவேற்புரை மற்றும் பகுதி கழகச் செயலாளர் இ. எஸ். பெர்னார்ட் ஆகியோர் ஏற்பாட்டில் பகுதி கழகங்களின் நிர்வாகிகள் ச. சிவக்குமார் வ. முத்து பி. அம்பிகா எஸ். நெடுஞ்செழியன் எம்.சி ஜி. கருணாமூர்த்தி எம். இளங்கோ ஐ. கஜேந்திரன் வி. கர்ணல் ஈ. வெங்கடேசன் பி. மீனா எஸ். செந்தில்குமார் பி. ராமகிருஷ்ணன் பி. பார்த்திபன் ஆ. சூசையராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் தா.மோ. அன்பரசன் கலந்து கொண்டு வெற்றிகளும் தோல்விகளும் நமக்கு புதியது அல்ல ஆகவே தோல்விகளை கண்டு தோளாமல் உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் நமது உயிரினும் மேலான அன்புத் தலைவர் ஓய்வுக்கு ஓய்வு கொடுத்து வங்கக் கடலோரம் துயில் கொண்டிருக்கும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை இரண்டு பகுதிகளில் உள்ள வட்டக் கழகங்களில் காலையிலே நமது இரு வண்ணக் கொடியை ஏற்றி அன்னாரின் புகைப்படத்தை அலங்கரித்து வைத்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தி மூத்த கழக முன்னோடிகளுக்கும் நமது மகளிர் அணி தாய்மார்களுக்கும் இளைஞர் அணி தம்பிமார்களுக்கும் முடிந்தால் புத்தாடைகள் வழங்கி அவர்களை சிறப்பித்து சிறப்பாகவும் எழுச்சியுடனும் எதிரிகள் இதைப் பார்த்து தோல்வியைக் கண்டு துவண்டு விடாமல் எவ்வளவு எழுச்சியுடன் விழா கொண்டாடுகிறார்கள் வியக்கும் வண்ணம் பிறந்தநாள் விழாவை கொண்டாடுங்கள் என சிறப்புரை ஆற்றினார்.

அதற்கு முன்பாக மாவட்ட கழக துணைச் செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி அவர்களும் தேர்தல் நேரத்தில் அல்லும் பகலும் ஆயிரா மல் உழைத்த வட்ட கழகச் செயலாளர் களுக்கும் நிர்வாகிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். பிறந்தநாள் விழாவை நமது மாவட்ட கழகச் செயலாளர் கூறும் வண்ணம் சிறப்பாக கொண்டாடுங்கள் என கூறி சிறப்பு உரையாற்றினார்.

இக்கூட்டத்தில் பம்மல் வடக்கு பகுதி கழகச் செயலாளர் த. ஜெயக்குமார் பொதுக்குழு உறுப்பினர் மு. ரஞ்சன் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோ. ஜான கிராமன் மாவட்ட பிரதிநிதிகள் தா. ராஜாராமன் கே. தனசேகரன் க. ரமேஷ் மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் வே. தாமோதரன் ச.ரஞ்சித் , பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் சரத் வெங்கடேசன் சா. சாகுல் ஹமீது, கேசவன் வட்டக் கழக செயலாளர் தே. இளங்கோவன் பி. பரமசிவம் பி. ராஜ்குமார் டி. வி. ராஜா எம். சி. மை. அந்தோணி டி. எச். பிரான்சிஸ் பால் கோ. ரங்கநாதன் வி. என். சிலம்பரசன் எம். முருகையன் பி. வெங்கடேசன் ஆர். கே. நாகராஜ் எஸ். முஜிபுர் ரகுமான் டீ. கன்னியப்பன் காமேஷ் ரங்கநாதன் பகுதி அணிகளின் துணை அமைப்பாளர்கள் வட்டக் கழக நிர்வாகிகள் வட்ட அணிகளின் நிர்வாகிகள் தேர்தல் பணிக்கு உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

121வது வட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

வட்டச் செயலாளர் டி.ராஜவேலு அறிவிப்பு!

சென்னை, மே 31-

121வது வட்டக் கழக கூட்டம் நடைபெறுகிறது. இது குறித்து வட்டச் செயலாளர் டி.ராஜவேலு அறிவிப்பு வருமாறு:-

சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு மற்றும் மயிலை மேற்கு பகுதி கழக செயலாளர் நந்தனம் கி.மதி ஆலோசனைப்படி 121-வது வட்ட கழக ஆலோசனைக் கூட்டம் இன்று (31.5.2026 ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணிக்கு பிருந்தாவனம் தெருவில் அமைந்துள்ள 121-வது வார்டு மாமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் 121-வது வட்ட கழக அவைத்தலைவர் கி.சேகர் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் 121-வது வட்டத்திற்குட்பட்ட வட்டக் கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: ஜூன் 3 முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா மற்றும் கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு 121-வது வட்ட செயலாளர் டி. ராஜவேலு தெரிவித்துள்ளார்.

தியாகராயர் நகர் மேற்கு பகுதி

133(அ) வட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

வட்டச் செயலாளர் பி.மாரி அறிக்கை!

சென்னை, மே.31

தியாகராய நகர் மேற்கு பகுதி 133அ வட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் இன்று (31.05.2026 - ஞாயிற்றுக் கிழமை) காலை 11 மணியளவில் மேட்லி சாலை மணமகிழ் மன்றத்தில் வட்ட அவை தலைவர் எஸ். ஈஸ்வரன் தலைமையில் மற்றும் தியாக ராயர் நகர் மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை எம். சி , தியாக ராய நகர் கிழக்கு பகுதி செயலாளர் கோ.சு.மணி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் எம்.சி ஆகியோர் முன்னிலையில் கூட்டம் நடைபெறுகிறது.

இக் கூட்டத்திற்கு வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள் ,, பகுதி பிரதிநிதிகள், இளைஞர் அணி, மகளிர் அணி, மகளிர் அணி தொண்டர் அணி, மாணவர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, ஆதிதிராவிடர் அணி, இலக்கிய அணி, வர்த்தக அணி, தொண்டர் அணி, சிறுபான்மை அணி, பொறியாளர் அணி, பாக முகவர்களின் அணி, அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், தொ.மு.சா தொழிலாளர் தொழில் சங்கம் கழகத்தின் இந்நாள் முன்னாள் நிர்வாகிகள் கழக முன்னோடிகள் அனைவரும் கூட்டத்தில் கலந்து கொள்கின்றனர்.

பொருள் : முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் கழக ஆக்க பணிகள் குறித்து.

இவ்வாறு வட்ட செயலாளர் பி.மாரி தெரிவித்துள்ளார்.

நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப் பகுதி பகுதியாகச் சென்று வெற்றி பெறச் செய்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார்.உடன் மேயர்.கோ. ராமகிருஷ்ணன், துணை மேயர் கே.ஆர்.ராஜு,பொதுக்குழு உறுப்பினர் நடராஜன் ஆகியோர் உள்ளனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

திருமதி விஜயலட்சுமி பழனிசாமி
மே 31 (2004)

திருமதி விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள் கிளைக் கழகச் செயலாளராக நீண்ட நாட்கள் பணியாற்றியவர்.

பின்னர், 1991ஆம் ஆண்டு சுல்தான்பேட்டை ஒன்றியக் கழகச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றினார்.

2000ஆம் ஆண்டு கோவை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றிய இவர், கோவை மாவட்டக் கழகச் செயலாளர் பொங்கலூர் நா.பழனிசாமி அவர்களின் துணைவியாராவார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.